2024 பிப்ரவரி 15]
24—

குடமுழுக்கு

***17873—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவைகுண்டம் தொகுதி, கொங்கராயக்குறிச்சியில் உள்ள அருள்மிகு வீரபாண்டீஸ்வரர் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் கோரிய வீரபாண்டீஸ்வரர் திருக்கோயிலில் 80 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடத்தப்பட்டிருக்கின்றது. இந்தத் திருக்கோயிலில் மொத்தம் 8 சன்னதிகள் இருக்கின்றன. இந்த 8 சன்னதிகளுக்கும் தொல்லியல் துறை, மண்டலக் குழு மற்றும் மாநிலக் குழு ஆகியவற்றிடம் ஒப்புதல் பெறப்பட்டு, வருகின்ற 5-3-2024 ஆம் தேதி அன்று பாலாலயம் நடைபெற இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பாலாலயத்தில் கலந்துகொண்டு அந்தப் பணியைத் துவக்கி வைக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள்.*

திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். நம்முடைய ஸ்ரீவைகுண்டம் தொகுதி மழையால் பாதிக்கப்பட்டிருந்தது அனைவருக்கும் தெரிந்ததுதான். நம்முடைய அரசாங்கம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டதால், மக்கள் அங்கு இயல்பு நிலைக்கு வந்திருக்கிறார்கள். அதற்கு நாம் இந்த அரசாங்கத்திற்கு நன்றி சொல்ல வேண்டும். ஒரே ஒரு செய்தியாக, அரசு அறிவித்திருந்த நிவாரணங்களை விரைவாக அங்கு செயல்படுத்த வேண்டும் என்ற பொதுவான கோரிக்கையை வைத்துவிடுகிறேன். எங்களுடைய*

தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் நகரத்திலே உள்ள கைலாசநாதர் சுவாமி திருக்கோயில் நவ திருப்பதி ஸ்தலங்களில் ஒன்றாகும். இங்கு சித்திரை மாதம், 10 நாட்கள் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்தக் கோயிலின் தேர் சேதமடைந்த நிலையில் கடந்த 50 ஆண்டுக்காலமாகத் தேரோட்டம் நடைபெறாமல் உள்ளது. இந்தத் தேரினைச் சரிசெய்து மீண்டும் தேரோட்டத்தை நடத்த அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி அமைந்த பிறகு, புதிய தேர்கள் என்று 71 தேர்களின் பணிகள் 41.53 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன. 48 திருக்கோயில்களில் தேர் மராமத்துப் பணிகள் சுமார் 6 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன. உறுப்பினர் கோரிய இந்தத் திருக்கோயில் என்பது 46 உட்பிரிவு 1-ன்கீழ் வருகின்ற கோயில்; போதிய நிதி ஆதாரம் இல்லாத கோயில். இருந்தாலும், இப்படி புராதனச் சின்னங்களாக விளங்குகின்ற திருக்கோயில்களின் திருத்தேர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு சுமார் ஒரு கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் திருத்தேர் அமைப்பதற்குண்டான ஒப்புதல் அனைத்து நிலைகளிலும் பெறப்பட்டுள்ளது. போதிய நிதி ஆதாரம் இல்லாததால், திருக்கோயிலினுடைய பொது நல நிதியிலிருந்து ஒரு தொகையும், திருக்கோயிலின் சார்பில் ஒரு தொகையும் ஒதுக்கீடு செய்யலாம் என்று கலந்தாய்வு செய்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மனது வைத்தால், ரூபாய் 1 கோடியே 16 இலட்சத்தை அவரே உபயதாரர் நிதியில் ஏற்றுக்கொண்டு அந்தத் திருத்தேர் பணிகளைத் தொடங்குவதாக இருந்தால், இந்த மாத இறுதிக்குள்ளாக அதற்குண்டான உத்தரவுகளை வழங்கி நாங்களும் கலந்துகொண்டு, நீங்களும் கலந்துகொண்டு அந்தத் திருத்தேர் பணியைத் துவக்கலாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2024 பிப்ரவரி 15]

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள்.*

திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அத்திருக்கோயில் ஒரு முக்கியமான அங்கமாக இருப்பதால், நம்முடைய அரசே முன்வந்து அப்பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். தூத்துக்குடி மாவட்டத்தில், ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில், கள்ளபிரான் சுவாமி திருக்கோயிலின் திருத்தேர் கொட்டகை அமைக்கவும் கோரிக்கை எழுந்துள்ளது. அதையும் அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்பதற்கு முன்பாகவே நான்கு கால் பாய்ச்சலில் இந்த அரசு செல்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விகளுக்கு தொடர் பதிலாக, இந்தத் திருக்கோயிலினுடைய திருத்தேர் கொட்டகை அமைக்கின்ற பணிக்கு 18.75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே ஒப்பந்தம் கோரப்பட்டு, கடந்த ஒன்பதாம் தேதி நிறைவு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த மாத இறுதிக்குள்ளாக, அந்தத் திருக்கோயிலின் திருத்தேர் கொட்டகைப் பணியைத் தொடங்குவதற்கு வசதியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உங்களுக்கும் அழைப்பு அனுப்பப்படும்; அந்த நிகழ்விலும் கலந்துகொள்ளுங்கள். ஏற்கெனவே கோரியபடி திருக்கோயிலினுடைய உபயதாரர் நிதிக்கு ஏதாவது தருகிறேன் என்று ஒப்புதல் தந்தால், இந்து சமய அறநிலையத் துறை மகிழ்ச்சியடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, இதுவரையில் 128 மரத்தேர்கள், திருத்தேர்கள் பாதுகாப்புக் கொட்டகை செய்வதற்கு சுமார் ரூ.16 கோடியை ஒதுக்கீடு செய்து, திருத்தேர்களைப் பாதுகாக்கின்றவண்ணம் கொட்டகைகள்

அமைக்கப்பட்டு வருகின்றன. இதில் அறிவிக்கப்பட்ட திருத்தேர் கொட்டகைகளில், 29 திருத்தேர்கள் கொட்டகைப் பணிகள் இதுவரை நிறைவுற்றிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியில், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், வேடந்தவாடி ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்பிலுள்ள ஆண்டவன், பெருமாள், விநாயகர் மற்றும் அம்மன் கோயில்களின் கட்டுமானம், நிதி இல்லாமல் கட்டி முடிக்கப்படாமல் உள்ளன. அக்கோயில்களுக்குக் குடமுழுக்கு செய்ய வேண்டிய அவசியம் இருக்கின்ற காரணத்தால், அந்த மக்களுடைய கோரிக்கையை ஏற்று, கிராமப்புறக் கோயில்கள் புனரமைப்பு நிதியிலிருந்து நிதி விடுவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அதேபோல, செங்கம் நீப்பத்துறையில் இருக்கக்கூடிய பெருமாள் கோயிலிலே புதிய திருமண மண்டபம் ஒன்று கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் விநாயகர் கோயில், அம்மன் கோயில் பணிகளை கோயில்கள் புனரமைப்பு நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். கிராமப்புற திருக்கோயில்கள், கடந்த ஆட்சிக் காலத்தில் ஆண்டுக்கு ஆயிரம் திருக்கோயில்கள் என்று ஏற்கெனவே திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. அதேபோல், ஆதி திராவிடர்கள் வசிக்கின்ற பகுதிகளிலும் ஆயிரம் திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. இரண்டையும் சேர்த்தால் ஆண்டுக்கு இரண்டாயிரம் திருக்கோயில்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் புனரமைப்புப் பணிகளுக்காக

2024 பிப்ரவரி 15]

எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, 1000 என்றிருந்ததை 1250 திருக்கோயில்களாக எடுத்துக்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. அந்தத் திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு 1 இலட்சம் ரூபாய்தான் கடந்த ஆட்சிக் காலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. உயர்ந்து வருகின்ற விலைவாசியைக் கருத்தில்கொண்டு, அந்த 1 இலட்ச ரூபாய் நிதியை, இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்திய பெருமை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையே சாரும்.

அதோடு மட்டுமல்லாமல், 2021–2022 ஆம் ஆண்டு அறிவிப்பின்படி, 2,500 திருக்கோயில்களுக்கு ஒரே தவணையாக 50 கோடி ரூபாயை—வில்லிவாக்கத்தில் இருக்கின்ற சிங்காரவேலர் மைதானத்தில் ஒரு பெரும் விழாவாக நடத்தி, 2,500 திருக்கோயில்களுக்கும்—அவர் திருக்கரங்களாலேயே ரூ.50 கோடி மதிப்புள்ள காசோலைகளை வழங்கிய பெருமை, சொன்னதைச் செய்கின்ற முதல்வர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் நடந்திருக்கிறது. அதேபோல், 2022–2023 ஆம் ஆண்டு 2,500 திருக்கோயில்களுக்குக் காசோலைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 2023–2024 ஆம் ஆண்டுக்கான 2,500 திருக்கோயில்களுக்குண்டான காசோலைகளும் தயார் நிலையில் இருக்கின்றன. இந்த மாத இறுதிக்குள் அவற்றையும் சேர்த்து வழங்கினால், கிராமப்புற ஆதி திராவிடர் பகுதிகளில் மட்டும், 7,500 திருக்கோயில்களுடைய திருப்பணிகள் நடைபெற்ற வரலாறு, இந்த திராவிட மாடல் ஆட்சியில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ALONE TRIUMPHS

முற்பகல் 10–30

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கிற விநாயகர் மற்றும் அம்மன் சன்னதிகள் கட்டுமானத்திற்கு உடனடியாக 2 இலட்சம் ரூபாய்க்கான காசோலை வழங்கப்படும். அதோடு அவர் கோரிய அந்த பெருமாள் திருக்கோயிலுக்கு திருமண மண்டபம்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியோடு—இந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் அந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2024 பிப்ரவரி 15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.

25—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***50780—திரு. A.K. செல்வராஜ்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை நகராட்சிப் பகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டத்தில், விளாங்குறிச்சியில் ELCOT நிறுவனம் 61.59 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.107 கோடி முதலீட்டில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை (SEZ) உருவாக்கியுள்ளது. இது காரமடை நகராட்சியிலிருந்து 24 கி.மீ. தொலைவில் உள்ளது.

ELCOT நிறுவனம் இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி 3,524 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாகக் கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது. இந்த ELCOSEZ–ல் பின்வரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

1) திருவாளர் விப்ரோ லிமிடெட்–9.5 ஏக்கர்.

2) திருவாளர் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட்–9.5 ஏக்கர்.

மேற்கூறிய தொழில்நுட்ப நிறுவனங்கள் 23 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்து, சுமார் 16,809 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.